[12th February 1959

SRI K. SATTANATHA KARAYALAR: கயிறுத் தொழில் சமுத்திரத் தண்ணீர் எங்கு கிடைக்கின்றதோ அங்குதான் சாத்தியம் என்று சொல்லுகிறார்கள். "இன்லண்டு வாடரை" உபயோகப்படுத்தலாம் என்று தற்பொழுது ஆராய்ச்சித் துறையிலே சொல்லுகிறார்களே, அது பற்றி சர்க்கார் பரிசீலனை செய்ததா ?

THE HON SRI R. VENKATARAMAN : கயிறுத் தொழில் செய்வதில் பல முறைகள் அனுஷ்டிக்கப்படுகின்றன. ஆனால் பழமையான பழக்கமான உப்புத் தண்ணீர், அதாவது கடல் தண்ணீரை உபயோகித்து கயிறு உற்பத்தி செய்வது தான் சிறந்த முறையாக இருக்கிறது. சிலோனில் தண்ணீரிலேயே போடாமல் இயந்திரத்தின் மூலமாக கூட கயிறு உற்பத்தி செய்கிறார்கள். சர்க்காரைப் பொறுத்த அளவில் கடற்கரை பிரதேசத்தில் கடல் நீரை உபயோகித்துத்தான் இதை செய்வதற்கு முயற்சி செய்து கொண்டு வருகிறோம்.

SRI A. A. RASHEED : சென்ற வருஷம் நம் மாகாணத்தில் எவ்வளவு கயிறுகள் திரிக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லுவார்களா ? (சிரிப்பு.)

THE HON. SRI R. VENKATARAMAN : அரசியல் துறையிலா அல்லது தேங்காய் நார் கயிறு துறையிலா என்று தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். (சிரிப்பு.)

SRI M. JAGANNATHAN : The Hon. Minister said that the industrial co-operatives started to promote this coir industry are given Government loans. May I know whether these loans are interest-bearing loans and if so, what the rate of interest is?

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I am sorry, I do not have the rate of interest with me just now. If the hon. Member wants, he may put a separate question in respect of the same.

SRI K. PONNIAN : தனிப்பட்டவர்கள் இந்தத் தொழிலை நடத்தினால் சர்க்கார் உதவி ஏதாகிலும் கிடைக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : அவர்களுக்கு எந்த விதமான உதவி வேண்டுமென்று சொன்னால், சர்க்கார் அதைப் பரிசீலனை செய்யும்.

Saloons run by barbers

* 160 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government are aware that some of the barber saloons are working from 6 a.m. to 9 p.m. every day; and

(*b*) if so, what steps are taken to regulate the hours of working of the labourers serving in these saloons?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) Under the opening and closing hours of shops fixed by Government under section 7 (1) of the Madras Shops and Establishments Act, 1947, saloons run by barbers can be kept open for service to customers from 6 a.m. to 10 p.m. on working days. According to section 9 of the Madras Shops and Establishments Act, 1947, no person employed in a shop shall be required or allowed to work for more

than 8 hours a day or 48 hours a week. For overtime work, payment of overtime wages should be made at twice the ordinary rates of wages. The provisions of the Madras Shops and Establishments Act, 1947, regulating the working hours of persons employed and payment of overtime wages are enforced in respect of all shops and establishments employing more than 3 persons.

SRI K. SATTANATHA KARAYALAR : சென்னையிலே உள்ள சலூன்களில் அதிலும் முக்கியமான சலூன்களில் ஒன்றிலுமே இந்தச் சட்டம் அமுலுக்கு வரவில்லையே ? ஏன் ?

THE HON. SRI R. VENKATARAMAN : அப்படி எந்த சலூனிலாவது இந்தச் சட்டம் அமுல் நடத்தப்படவில்லை என்று சொன்னால், ஒன்று அதில் மூன்று பேர்களுக்கு குறைவான சிப்பந்திகள் வேலை செய்து கொண்டிருக்கலாம். அவர்களுக்கு "எக்ஸெம்ப்ஷன்" கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தக் காரணத்தினால் இருக்கலாம். அப்படி எந்த சலூனில் இந்தச் சட்டம் அமுல் நடத்தப்படவில்லை என்று உடனடியாக சர்க்காருக்கு புகார் செய்தால் சர்க்கார் அதை கவனிப்பார்கள்.

Government Offices

*241 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Chief Minister be pleased to state whether the Government propose to decentralise the location of Government Offices now situated in Madras?

THE HON. SRI C. SUBRAMANIAM : There is no such proposal under consideration.

SRI S. LAZAR : சென்னை நகரம் ஒரு மூலையில் இருக்கும் காரணத்தினாலும், ஜனநெருக்கடியை தவிர்க்கக்கூடிய நோக்கத்தோடும், இனிமேல்பட்டு நிறுவ இருக்கின்ற அலுவலகங்களையாவது ராஜ்யத்தின் மற்ற இடங்களில் நிறுவ அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அது எந்த அலுவலகம் என்பதைப் பொறுத்திருக்கிறது. இங்கே சர்க்கார் நடக்கின்ற இடத்திலேயே அந்த அலுவலகம் இருக்கவேண்டியது அவசியமாக இருந்தால், அதை வேறு இடத்திலே அமைக்க முடியாது.

Minor Irrigation Project

* 242 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களின் அபிவிருத்திக்காக மத்திய அரசாங்கத்தினிடமிருந்து நம் மாநில அரசாங்கத்திற்கு 1957–58-ல் என்ன உதவி கிடைத்திருக்கிறது ?

(ஆ) மான்யம் எவ்வளவு ?

(இ) கடன் தொகை எவ்வளவு ?

(ஈ) சிறிய நீர்ப்பாசன அபிவிருத்திக்காக எந்தெந்த திட்டங்களை மாநில அரசாங்கம் தேர்ந்தெடுத்திருக்கிறது ?

(உ) அத் திட்டங்கள் ஒவ்வொன்றிற்கும் ஆகும் செலவு எவ்வளவு ?